Australian Government
Aged Care Quality and Safety Commission

Engage
*Empower*
**Safeguard**



# முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநர், பணியாளர் அல்லது பொறுப்பாளி ஒருவர் குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலைகள் உள்ளனவா?

**நீங்கள் அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.** நீங்கள் அல்லது வேறு ஒருவர் பெற்றுவரும் முதியோர் பராமரிப்புக் குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், அதை உங்கள் சேவை வழங்குநரிடம் அல்லது எங்களிடம் தெரிவிக்கலாம்.

புகார் அளிப்பதற்கான  உங்களுக்கு உரிமை உண்டு. முதலில் உங்கள் சேவை வழங்குநரிடம் உங்கள் கவலைகளைத் தெரிவிக்குமாறு அல்லது புகாரை அளிக்குமாறு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். ஒரு புகாரைத் தீர்ப்பதற்கு இதுவே பெரும்பாலும் எளிதான மற்றும் விரைவான வழியாகும், மேலும் இது உங்கள் சேவை வழங்குநருக்குத் தங்கள் சேவையை மேம்படுத்த ஒரு வாய்ப்பையும் அளிக்கிறது. புகார் அளிப்பது உங்களுக்கு அசௌகரியமான உணார்வை ஏற்படுத்தக் கூடாது,  அல்லது அப்படிச் செய்வது தவறு என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடாது.

**இந்தச் சேவைக்குள்ளாக இருக்கும்  உங்களுக்கான  உள்ளூர் தொடர்பு:**

இதைச் செய்வதில் உங்களுக்குச் சங்கடமாக இருந்தால், அல்லது உங்கள் சேவை வழங்குநரிடம் இருந்து ஒரு புகாரைத் தீர்த்து வைப்பதில் உங்களுக்குச் சிக்கல் இருந்தால்  இலவச ஆலோசனை அல்லது உதவிக்கு **1800 951 822 என்ற எண்ணில் 'முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணைய'த்துடன்** தொடர்புகொள்ளுங்கள். முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநர், பணியாளர் அல்லது பொறுப்பாளி  ஒருவரைக் குறித்து நீங்கள் எங்களிடம் புகார் அளிக்கலாம் அல்லது பின்னூட்டம்  வழங்கலாம். நாங்கள் அதைக் கையாளும் விதத்தில் நீங்கள் ஈடுபாடுகொள்ளாமல் , உங்கள் கவலைகளை எங்களிடம் தெரிவிப்பதற்கான ஒரு வழிதான் பின்னூட்டம். நீங்கள் விரும்பினால், உங்கள் கவலைகளை அநாமதேயமாக அல்லது இரகசியமாகப் பகிர்ந்து கொள்ளலாம்.

உங்கள் கவலையை எழுப்புவதற்கு உங்களுக்கு ஆதரவுதவி தேவைப்பட்டால், ஒரு இலவச ஆலோசகரால் உதவ இயலுமாகலாம். 'முதியோர் பரிந்துரைஆலோசனை வலையமைப்'(OPAN)பின் 'முதியோர் பராமரிப்பு ஆலோசனைத் தொடர்பு' எண்ணான**1800 700 600**-ஐ  அழையுங்கள்.

எங்களுடன் பேசுவதற்கு உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், **131 450** என்ற எண்ணில் 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு'ச் சேவையை அழையுங்கள்.


**தொலைபேசி**
1800 951 822

**மின்னஞ்சல்**
info@agedcarequality.gov.au

**வலைத்தளம்**
agedcarequality.gov.au

**அஞ்சல்**
**உங்கள் தலைநகரில்** Aged Care Quality and Safety Commission
GPO Box 9819